# நிறுவகத் தகவல்கள்

**நிறுவகத்தின் பெயரும் முகவரியும் :**

- லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்
- 100/3/2/, சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02.

**பதிவு :**

- 1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க லோஹோர் சீமாட்டி கடன் நிதியப் பொறுப்புப் சபைச் சட்டத்தின் (1953 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட) கீழ் நிறுவப்பட்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச் சட்ட நிறுவனமாகும்.

**நம்பிக்கைப் பொறுப்புச் சபை :**

- செல்வி கீத்தா குமாரி விமலவீர - தலைவி, (மேலதிப் பணிப்பாளர் - நாயகம், தேசிய வரவு செலவுத் - திட்டத் திணைக்களம்)
- திரு. நிமல் அபேசிறி - நிருவாகப் பொறுப்பாளர்
- திரு. டப்.ஏ.டீ.ஆர். குணவர்தன - உறுப்பினர்
- திரு. கே.ஜீ. சோமசுந்தர - உறுப்பினர்
- திரு. கே.ஜே.பீ.ஏ. திசாநாயக்க - உறுப்பினர்

**கணக்காய்வுக் குழு :**

- திரு. ரீ.என். ஓஷன் - தலைவர், (பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம்)
- திரு. டப்.ஏ.டீ.ஆர். குணவர்தன - உறுப்பினர்
- திரு. கே.ஜீ. சோமசுந்தர - உறுப்பினர்
- திரு. கே.ஜே.பீ.ஏ. திசாநாயக்க - உறுப்பினர்

**கணக்காய்வாளர்** : போப் அன் கம்பனி
பட்டயக் கணக்காளர்,
141/7, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

**சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வங்கி** : மக்கள் வங்கி,
தலைமையகக் கிளை,
கொழும்பு 02.

# தலைவரின் செய்தி

இலங்கையில் நிரந்தர வதிவிட நிதியமொன்றாக 1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பாளர் சபை சட்டத்தின் (1956 திருத்த) மூலம் நிறுவப்பட்ட லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் 2014 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கையினை இதனுடன் சமர்ப்பிக்கின்றேன். அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் இலகுவான நிபந்தனைகளின் மீது குறுங்கால மற்றும் துரிதமான கடன் தொகையினை வழங்குவதன் ஊடாக அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவிப்பதற்கான நிறுவனசார் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளமை பற்றி மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்ற ஆண்டு காலப் பகுதியினுள் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 5122 ஊழியர்கள் இந்நிதியத்தின் பயனாளிகளாக விளங்கியுள்ளதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.33% ஆன பயனாளிகள் அதிகரித்துள்ளனர். அப்பயனாளிகளில் 50% இற்கும் அதிகமானோர் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த அங்கத்தவர்களாகக் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும். அவ்வாறே, 2014 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற உச்ச கடன் தொகை ரூபா. 50,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலே 5,122 பயனாளிகளுக்கு 203.5 மில்லியன் ரூபா கடன் தொகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முடிந்துள்ளமை நிறுவனம் பெற்றுள்ள வெற்றியாகும். கடனை அறவிட்டுக் கொள்வதற்கான முன்னேற்றமானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 5.38% வளர்ச்சியினைக் காட்டுகின்றது.

செயற்படா கடன் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கான பணியினை வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்காக பொது தொழில் முயற்சிகள் குழுவின் சிபாரிசை அமுல்படுத்தி மேற்கொண்ட முயற்சியானது 2014 ஆம் ஆண்டிலே வெற்றகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதிசார் நிரந்தரத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் நிதமும் அவதானம் செலுத்தப்பட்டு வந்ததுடன் நிறுவனத்தின் முன்னேற்றம் கருதி மேற்கொண்ட நடவடிக்கைகளில் நிறுவனத்தின் பணியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் கடன் வழங்குதல், ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல் மற்றும் கட்டிட வளாகத்தை மேம்படுத்துதல் மற்றும் பதவியணியின் நவீனமயப்படுத்தல், ஊழியர்களுக்கான பயிற்சியளித்தல் மற்றும் ஏனைய நலன் புரி பணிகளுக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே, 2015 ஆம் ஆண்டிலே தொடர்ந்தும் கடன் நிதியத்தினை பலப்படுத்துவதற்காக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உச்ச கடன் எல்லை, அரசாங்க பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 250,000 வரையும் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 100,000 வரையும் கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டிலே நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதில் ஆற்றிய அர்ப்பணிப்புக்காக நிதியத்தின் முழு பதவியணிக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்வதுடன் அரச துறை ஊழியர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்து மகிழ்ச்சிகரமான அரச சேவை ஒன்றினை கட்டியெழுப்புவதற்காக பங்களிப்புச் செலுத்தும் நிறுவன சார் செயற்பணியினை பலமிக்க முறையில் எதிர்காலத்திலும் லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தினால் மேற்கொள்ளப்படும்.



**தலைவர்**
லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

# நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளரின் செய்தி

லோஹோர் சீமாட்டி கடன் நிதியமானது அரச துறையினதும் மற்றும் பகுதி அளவிலான அரச துறையினதும் நலன் கருதி அவர்களது திடீர் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்து நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் வெற்றிகரமான முறையில் இயங்கி வருகின்றது.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான் நிதியத்தின் நிருவாகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் 2014 நிதியாண்டிற்குரிய ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்கக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

2014 ஆம் ஆண்டிலே இந்நிதியத்தின் பொறுப்புக்களை அவதானிக்கும் போது 5122 பயனீட்டாளர்களுக்கு 203 மில்லியன் ரூபா பெறுமதியான குறுங்காலக் கடன் தொகையினைப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது. இத்தொகையினை 2013 ஆம் ஆண்டின் செயலாற்றுகையுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டிலே திருப்திகரமான முன்னேற்றம் ஒன்றினைக் காட்டுகின்றது. பல ஆண்டு காலமாகக் காணப்பட்டு வருகின்ற அறவிட முடியாக் கடனை அறவிட்டுக் கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டிலே நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் விசேட கவனம் செலுத்தப்பட்டு சுமார் 95% சதவீதமான தொகையினை வெற்றிகரமான முறையில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடன் வழங்குவதற்கான ஆவண முறைமையினை நவீனமயப்படுத்தி அறவிட முடியாத கடன் கோப்புக்களை துரிதமாக இனங்காண்பதற்கு இலகுவான முறையில் ஆவணக் காப்பகத்தை நவீனமயப்படுத்தி எதிர்காலத்தில் எந்தவொரு கடன் தொகையினையும் அறவிட்டுக் கொள்ளக் கூடியவாறு பேணி வருவதற்கு புதிய முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டது.

மேலும் அரச கொள்கைகளுக்கேற்ப நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு இந்நிதியத்தின் நன்மைகளை நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றுகின்ற அரச ஊழியர்களினால் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு நிதியத்தின் வசதிகளை விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேற்படி குறிக்கோளை அடையும் பொருட்டு நேரடி பங்களிப்புச் செலுத்திய கடந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும், இதற்காக அர்ப்பணித்துச் செயலாற்றிய பதவியணியின் அனைவருக்கும், 2015 பெப்ரவரி மாதம் நான் நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியை ஏற்றதன் பின்னர் எனக்கு பங்களிப்புச் செலுத்திய அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளர்

டப்ளியூ. வின்ஸ்டன் பத்திராஜ

லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

# லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

## நோக்கு

அரச சேவை ஊழியர்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனமாக செயற்படுதல்

## செயற்பணி

அரச ஊழியர்களை கடன் பழுவிலிருந்து விடுவித்து திருப்திகரமான அரச சேவையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்தல்.

## குறிக்கோள்

அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் இலகுவான நிபந்தனைகளின் கீழ் குறுங்கால கடன்களை துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்தல்

## பணிகள்

- கடன் நிதியத்தினை நிலையாக பேணிவரும் அதே நேரம் பயனாளிகளுக்கு கடன் வழங்குதல்.
- நிறுவனசார் மேம்பாடு மற்றும் இயலளவு விருத்தி.
- நிதியினைத் திரட்டி நிறுவனத்தை பேணிவருவதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தலும் அமுலாக்கலும்.
- கடன் முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான உபாயத் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் கடன் வழங்கும் வசதிகளை மேம்படுத்தல்.
- ஏனைய அரச நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடன் திட்டங்களை அமுல்படுத்தும் போது வசதியளிப்பவராக செயற்படல்.
- ஏனைய அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு கடன் வழங்கும் செயற்பாடுகளை அமுல்படுத்தும் போது வசதியளிப்பவராக செயற்படல்.

# 1.2014 - ஆம் ஆண்டில் நிதியத்தின் செயலாற்றுகை

## 1.1 2014 ஆம் ஆண்டில் பயனாளிகள்

2014 ஆம் ஆண்டிலே அரச மற்றும் பகுதியளவில் அரச நிறுவனங்களில் பணியாற்றிய ஊழியர்கள் 5,122 பேர் இந்நிதியத்தின் பயனாளிகளாக காணப்பட்டுள்ளனர். அத்தொகையானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டிலே நன்மை பெறுவோர் 2.33% சதவீத அதிகரிப்பாகும். அப்பயனாளிகள் வசிக்கும் மாவட்டங்களுக்கு ஏற்ப முதலாவது அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னிட்டு நிதியத்தினால் அமுல்படுத்திய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் பங்களிப்பும் இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே நன்மை பெறுவோரில் 50% சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது இரண்டாவது அட்டவணையின் மூலம் தெளிவாகின்றது.

**அட்டவணை 01 – 2013 / 2014 ஆண்டுகளில் கடன் பெற்றுக் கொண்ட அரச மற்றும் அரை அரச சேவை பயனாளிகள் மாவட்ட ரீதியாக**

| மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | **2014** | **(%)** | **2013** | **(%)** |
| கொழும்பு | 763 | 14.90 | 711 | 14.20 |
| கம்பஹா | 680 | 13.28 | 677 | 13.52 |
| அநுராதபுரம் | 341 | 6.66 | 322 | 6.43 |
| கண்டி | 338 | 6.60 | 303 | 6.05 |
| வவுனியா | 22 | 0.43 | 25 | 0.50 |
| களுத்துறை | 444 | 8.66 | 416 | 8.32 |
| இரத்தினபுரி | 186 | 3.63 | 172 | 3.43 |
| காலி | 268 | 5.23 | 287 | 5.73 |
| குருநாகல் | 515 | 10.05 | 428 | 8.55 |
| புத்தளம் | 101 | 1.96 | 53 | 1.06 |
| யாழ்ப்பாணம் | 05 | 0.10 | 02 | 0.04 |
| பொலன்னருவை | 131 | 2.56 | 271 | 5.42 |
| திருகோணமலை | 27 | 0.53 | 211 | 4.22 |
| முல்லைதீவு | 07 | 0.14 | 04 | 0.08 |
| மன்னார் | 10 | 0.20 | 08 | 0.16 |
| பதுளை | 172 | 3.36 | 145 | 2.90 |
| மாத்தளை | 133 | 2.60 | 123 | 2.45 |
| அம்பாந்தோட்டை | 138 | 2.69 | 90 | 1.80 |
| கேகாலை | 335 | 6.54 | 191 | 3.82 |
| மட்டக்களப்பு | 02 | 0.04 | 41 | 0.82 |
| அம்பாறை | 97 | 1.89 | 228 | 4.55 |
| மொனராகலை | 174 | 3.40 | 122 | 2.44 |
| நுவரெலியா | 79 | 1.54 | 66 | 1.33 |
| மாத்தறை | 154 | 3.01 | 109 | 2.18 |
| **மொத்தம்** | **5122** | **100** | **5,005** | **100** |

## அட்டவணை 02 – 2013 / 2014 ஆண்டுகளில் அரச சேவை பயனாளிகள் பதவிகளின் பிரகாரம்

| பதவி | பயனாளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| இராணுவ சிப்பந்திகள் | 995 | 983 |
| பொலிஸ் காண்ஸ்டபில் | 622 | 590 |
| பொலிஸ் சார்ஜன் | 234 | 216 |
| சாதாரண தொழிலாளி | 381 | 514 |
| அலுவலக உதவியாளர் | 249 | 330 |
| முகாமைத்துவ உதவியாளர் | 185 | 375 |
| கோப்ரல் | 1,632 | 1,207 |
| சாரதி | 122 | 145 |
| பொலிஸ் பரிசோதகர் | 59 | 46 |
| உப பொலிஸ் பரிசோதகர் | 36 | 31 |
| சமையல்காரர் | 27 | 57 |
| பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர் | 35 | 11 |
| அளவை உதவியாளர் | 55 | 28 |
| சிறைச்சாலை காவலாளி | 59 | 46 |
| சிற்றுண்டிச்சாலை ஊழியர் | 24 | 24 |
| அபிவிருத்தி உதவியாளர் | 44 | 38 |
| கவனிப்பாளர் | 07 | 04 |
| காவலாளி | 26 | 18 |
| மோட்டார் திருத்துனர் | 05 | 02 |
| பொலிஸ் சிவில் உதவியாளர் | 07 | 02 |
| தொழில்நுட்பவியலாளர் | 27 | 15 |
| தச்சுத்தொழில் அலுவலர் | 14 | 07 |
| சுகாதார நிருவாகி | 20 | 05 |
| மேஜர் | 29 | 18 |
| மனிதவள உதவியாளர் | 13 | 04 |
| தீயணைப்பாளர் | 17 | 02 |
| நிருவாக உத்தியோகத்தர் | 06 | 11 |
| மேசன் | 10 | 09 |
| கணக்காளர் | 01 | 09 |
| லெப்டினன் | 45 | 60 |
| களஞ்சிய உதவியாளர் | 06 | 07 |
| மின்சார தொழில்நுட்பவியலாளர் | 15 | 07 |
| துவிச்சக்கர தூதேவலர் | 04 | 02 |
| ஓவசியர் | 06 | 02 |
| தபால் அலுவலர் | 20 | 13 |
| உதவிப் பணிப்பாளர் | 04 | 05 |
| வரவேற்பாளர் | 04 | 02 |
| புத்தகம் கட்டுநர் | 08 | 02 |
| கிராம அலுவலர் | 04 | 29 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 13 | 31 |
| ஏனையவை | 52 | 98 |
| **மொத்தம்** | **5,122** | **5,005** |

## 1.2 கடன் வழங்கும் செயற்பாடும் முன்னேற்றமும்

பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த அரச அல்லது அரை அரச நிறுவன ஊழியர் ஒருவருக்கு இந்நிறுவனத்திடம் கடன் பெறுவதற்காக விண்ணப்பிக்க முடியும்.

- ஓய்வூதிய உரித்துடைய அரச சேவையில் பணியாற்றும் 3 வருட ஆகக் குறைந்த சேவைக் காலத்தைக் கொண்ட ஊழியர் ஒருவராக இருத்தல்.
- ஓய்வூதிய உரித்தற்ற அரை அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஒருவராயின் 5 வருட நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.
- வழங்கப்படுகின்ற கடன் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்குப் போதிய சேவைக் காலமொன்று இருத்தல். (ஓய்வுபெறும் வயதெல்லை 55 வருடங்களாகக் கருதப்படும்.
- விண்ணப்பதாரருக்கு மேற்படி தகைமையுடைய இரண்டு பிணையாளர்களை வழங்குதல்.
- அரை அரச நிறுவனம் ஒன்றின் ஊழியர் ஒருவராயின் பிணையாளாகள் இருவரில் ஒருவா் ஆகக் குறைந்தது 03 வருட நிரந்தர சேவைக் காலம் ஒன்றினைக் கொண்டுள்ள ஓய்வூதிய உரித்துடைய அரச சேவை ஊழியர் ஒருவராக இருத்தல் வேண்டும்.
- அனைத்து கடன் விண்ணப்பதாரர்களினதும் மாதாந்தச் சம்பளத்தில் 40% சதவீத எல்லையினுள் கடன் தவணைத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பிருத்தல்.

மேற்படி தகைமை உடையவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற விண்ணப்பப் பத்திரங்கள் மற்றும் கடன் வழங்கல் பற்றிய 2014 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம் பற்றி பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 03 – கடன் வழங்கும் படிமுறை - 2014**

| மாதம் | வழங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தகைமை பெற்ற கடன் பெறுநர்களின் எண்ணிக்கை | வழங்கிய கடன்களின் எண்ணிக்கை | கடன் பெறுமதி (ரூ. 000) |
|---|---|---|---|---|
| சனவரி | 750 | 416 | 412 | 16,275 |
| பெப்ரவரி | 760 | 425 | 428 | 16,890 |
| மார்ச் | 1,043 | 460 | 437 | 17,110 |
| ஏப்ரல் | 578 | 412 | 410 | 16,005 |
| மே | 1,216 | 437 | 438 | 17,135 |
| யூன் | 924 | 459 | 452 | 17,735 |
| யூலை | 915 | 496 | 493 | 19,260 |
| ஆகஸ்ட் | 700 | 490 | 483 | 18,770 |
| செப்தெம்பர் | 817 | 437 | 422 | 16,525 |
| ஒக்தோபர் | 729 | 407 | 319 | 12,545 |
| நவம்பர் | 704 | 361 | 375 | 14,745 |
| திசெம்பர் | 876 | 428 | 453 | 20,510 |
| மொத்தம் | **10,012** | **5,228** | **5,122** | **203,505** |

## 1.3 வழங்கிய கடன் எல்லைகளும் கடன்களின் பெறுமதிகளும்

2014 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் வழங்கப்படுகின்ற உச்ச கடன் தொகையானது ரூ.50,000/- வரை அதிகரிக்கப்பட்டது. ரூ.10,000/- ஆன மிகச் சிறிய கடன் தொகையும் அவசர தேவைகளின் போது சிற்றூழியர்களுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு 2014 ஆம் ஆண்டிலும் பெணிவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் சனவரி முதல் திசெம்பர் வரையிலான காலப் பகுதியினுள் உச்ச கடன் எல்லையின் கீழ் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையின் பெறுமதி பின்வருமாறு. இங்கு 5,122 அரச ஊழியர்களுக்கு 203.5 மில்லியன் ரூபா பெறுமதியான கடன் வழங்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டிலே வழங்கிய மொத்த கடன் தொகையின் பெறுமதியான 194.4 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 4.9% சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 04 – கடன் தொகைகளின் எல்லைக்கேற்ப முன்னேற்றம் - 2014**

| உச்ச கடன் எல்லை | வழங்கிய கடன்களின் எண்ணிக்கை | கடன் தொகையின் பெறுமதி (மி.ரூ.) |
|---|---|---|
| 50,000 | 274 | 13,700 |
| 40,000 | 4,577 | 183,080 |
| 30,000 | 151 | 4,530 |
| 20,000 | 87 | 1,740 |
| 15,000 | 25 | 375 |
| 10,000 | 8 | 80 |
| **மொத்தம்** | **5,122** | **203,505** |

## 1.4 கடன் அறவீட்டு முன்னேற்றம்

2011 மற்றும் 2014 காலப் பகுதியுடன் தொடர்புடையதாக கடன் வழங்கல் மற்றும் அறவிடல் பற்றிய முன்னேற்றம் பற்றி அட்டவணை 5 இன் மூலமும் 1 ஆவது வரைபின் மூலமும் காட்டப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டிலே கடன் அறவிடுவதில் முன்னேற்றமானது 5.38% சதவீத விருத்தியைக் காட்டுகின்றது.

**அட்டவணை 05 – 2011 முதல் 2014 வரையில் கடன் வழங்கல் மற்றும் கடன் அறவிடல்**

| ஆண்டு | கடன்களின் எண்ணிக்கை | கடன் வழங்கல் (ரூ. 000) | கடன் அறவிடல் (ரூ. 000) |
|---|---|---|---|
| 2011 | 4791 | 193,645 | 215,221 |
| 2012 | 4358 | 173,970 | 228,064 |
| 2013 | 5005 | 194,040 | 240,064 |
| 2014 | 5122 | 203,505 | 252,973 |

**வரைபு - 01**



## 1.5 பலவருட காலமாக நிலவிய செயற்படா கடன் அறவீட்டின் முன்னேற்றம்

2011.04.29 ஆம் திகதி இடம்பெற்ற பொது தொழில் முயற்சிகள் பற்றிய செயற்குழுவின் போது லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதன் முன்னேற்றம் பற்றி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. 2012.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய இறுதி கணக்குகள் மற்றும் கணக்கீட்டு அறிக்கைகள் 2013.03.06 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

அதன் போது விசேட கவனம் செலுத்தப்பட்ட செயற்படா கடன் தொகையினை முழுமையாக அறவிட்டுக் கொள்வதற்கும், தொடர்ந்தும் அறவிட்டுக்கொள்ள முடியாத எனினும் காரணத்துடன் நிரூபிக்கக் கூடிய செயற்படா கடன் தொகையினை முழுமையாக புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கும் மற்றும் நிறுவனங்கள் மிகை தொகையினை அறவிடுவதனை கட்டுப்படுத்துவதற்கும் 2014 ஆம் ஆண்டு முழுவதும் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

01. சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைகளின் பிரகாரம் அந்தந்த காலப் பகுதிகளில் செயற்படா கடனாக மாறிய 09 மில்லியன் ரூபா தொகை (Capital Loan Amount) விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் ஆகும் போது (வட்டியுடன்) 59.2 மில்லியன் ரூபா வரை அதிகரித்தல் மற்றும் அதில் 51.5 மில்லியன் ரூபா தொகையானது சுமார் 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த செயற்படா கடனாக மாறியுள்ளமை என்பன இக்குழுவினால் பிரதானமாக அவதானிக்கப்பட்டுள்ளன. இந்த செயற்படா கடனானது 1984 ஆம் ஆண்டு முதல் பேணிவரப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. (அட்டவணை 6).

02. பொது தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் ஆலோசனைகள் தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது தொடர்ந்தும் கவனம் செலுத்தி செயற்படா கடன் தொகையினை மீள அறவிட்டுக் கொள்வதற்காக தனியான அலுவலர் ஒருவரை நியமித்து இந்த செயற்படா கடனை அறவிட்டுக் கொள்வதில் முன்னேற்றம் பற்றி விசேட குழுவொன்றின் மூலம் தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. அவ்வாறே, அனைத்து செயற்படா கடன் தொகைகளையும் அறவிட்டு அப்பணியை பூர்த்தி செய்வதற்கும் தொடர்ந்தும் அறவிட முடியாத கடன் தொகை இருப்பின் அது தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த திட்டத்திற்கு அமைய பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றி, செயற்படா கடன் தொகையினை அறவிட்டுக் கொள்ளும் செயற்பாட்டினை வெற்றிகரமான முறையில் அமுல்படுத்துவதன் மூலம் செயற்படாதிருந்த கடன் கணக்குகளில் 2011 – 2014 காலப் பகுதியினுள் 14.0 மில்லியன் ரூபா தொகையினை அறவிட்டுக்கொள்ள முடிந்தது.

மேலும் நிறுவனத்தில் காணப்பட்ட காலம் கடந்திருந்த 1,553 செயற்படா கடன் கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்க நியமிக்கப்பட்டிருந்த விசேட அலுவலர்கள் அடங்கிய குழுவினால் இக்கணக்குகளைத் தனித்தனியாக பரீட்சித்த போது ஒரு பயனீட்டாளருக்கு பெற்றுக் கொடுத்த கடன் தொகையின் பெறுமதி, திகதி, தனிநபர் மற்றும் சேவைத் தரவுகள், மீள அறவிட்டுக் கொண்ட கடன் பெறுமதி, செயலிழந்த திகதி, அன்றைய தினத்தில் மீதி, தற்போதைய மீதி, கடனை அறவிட்டுக் கொள்வதற்கான முயற்சிகள் (அனுப்பிய கடிதங்களின் எண்ணிக்கை, கிடைக்கப் பெற்றுள்ள பதில்கள்) மற்றும் கடனாளிகளின் தற்போதைய நிலை, (வயது, சேவையில் உள்ளமை, இல்லாமை, உயிருடன் இருத்தல், மரணித்திருத்தல், வயோதிபம்) உள்ளிட்ட அனைத்து விதமான தரவுகளையும் பரந்த அளவில் விசாரணைக்கு உட்படுத்தி சுருக்க ஆவணமொன்று 813 ஆவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்றைய தினம் வரையில் மேற்படி அடிப்படைக் கடன் தொகையானது 12.46 மில்லியன் ரூபாவாகவும், திரண்ட வட்டியானது 58.2 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டு மொத்தத் தொகையானது 70.62 மில்லியன் ரூபா வரையில் அதிகரித்துக் காணப்பட்டது.

அதன் போது தெளிவான விடயத்திற்கு ஏற்ப, இக்கடன் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக எடுக்கக் கூடிய அனைத்து விதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் அது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கான காலம் கடந்துள்ளமையால் இலங்கை நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இக்கடன் தொகையினை நிறுவனத்தின் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவின் சிபாரிசுடன் புத்தகங்களில் இருந்து பதிவளிப்பது தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டது. அவ்வாறே, அட்டவணை 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அடிப்படைத் தொகையான 12.46 மில்லியன் ரூபா தொகையுடன் ஒப்பீட்டளவில் நிறுவனத்திற்கு மீள கிடைக்கப் பெற்ற 14.64 மில்லியன் ரூபா தொகையில் 17.5% சதவீத மிகையொன்றினைக் காட்டுவதுடன் அதில் வட்டி வருமானம் (11.5%) உள்ளடக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

அதன் பிரகாரம் அறவிட முடியாத கணக்குகள் தொடர்பில் 4 கட்டங்களின் கீழ் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

I. 1984 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியினுள் கடன் தொகையினைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்தும் செயற்படா நிலைக்கு உள்ளான 504 கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டன. இந்த அனைத்து விதமான செயற்படா கடன்களுக்கும் காரணம் தவணைத் தொகையானது விட்டு விட்டு அறவிடப்பட்டமையாகும். அதன் பிரகாரம், 1984 – 2005 காலப் பகுதியினுள் இருந்த 504 கணக்குகள் தொடர்பாக பின்வரும் தகவல்கள் தெரியவந்தன.

| | | |
|---|---|---|
| பெற்றுக் கொடுத்திருந்த மொத்தக் கடன் தொகையின் பெறுமதி | - ரூ: | 3,877,200.00 |
| அறவிட்டுக் கொண்ட தொகையின் பெறுமதி (வட்டியுடன்) | - ரூ: | 6,414,770.38 |
| ஆரம்பக் கடன் தொகையுடன் ஒப்பீட்டளவில் அறவிட்டுள்ள தொகை | - ரூ: | 2,537,570.38 |
| செயலிழந்த தினத்தன்று மீதி (ஆரம்ப கடன் தொகையின்) | - ரூ: | 1,546,085.27 |
| 2013.12.31 தினத்தன்று நிலுவை மீதி (வட்டியுடன்) | - ரூ: | 16,226,259.43 |

இத்தொகையில் ரூ. 6,414,770.38 பெறுமதியான தொகை விட்டு விட்டு தவணைத் தொகையாக அறவிட்டுள்ளமை காரணமாக அக்கணக்குகளைத் தொடர்ந்தும் பேணிவர வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் இக்குழுவினால் அக்கணக்குகளை தீர்ப்பதற்குள்ள வழிமுறைகள் பற்றியும் தேடிப்பார்க்கப்பட்டன. அதன் போது தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியுள்ள ரூ. 16,226,259.43 தொகையினை ஆரம்பத் தொகையுடன் ஒப்பிடுகையில் சதவீத மிகையாகும் என்பதனைக் கவனத்திற் கொண்டு 2013.12.27 ஆம் திகதி நடைபெற்ற 817 ஆவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இறுதிக் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அகற்றுவதன் மூலம் வருடாந்த தேறிய இலாபத்தில் மோசமான தாக்கங்கள் ஏதும் இடம்பெறவில்லை. (அட்டவணை – 6)

II. இவ்வாறு 36 செயற்படா கணக்குகளில் காணப்பட்ட செயற்படா கடன் தொகைகளை மீள அறவிட்டுக் கொள்வதற்கு எடுக்கக் கூடிய உச்ச நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ந்தும் அறவிட்டுக்கொள்ள முடியாது போன மீதிகளை அறவிட முடியாக் கடனாக பதிவளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அங்கு 36 கணக்குகளில் இருந்து அறவிட்டுக் கொள்ளக் கூடியதாக இருந்த தொகையைத் தவிர மீதித் தொகையினை அறவிட முடியாக் கடனாக பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் சுருக்கம் பின்வருமாறு அமைந்துள்ளதுடன், அறவிட முடியாக் கடன்களில் இருந்து பதிவளித்த விதம் பற்றி அட்டவணை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 36 கணக்குகளில் காணப்பட்ட கடன் தொகைகளின் பெறுமதி | - ரூ: | 209,500.00 |
| அதில் மீள அறவிட்டுக் கொண்ட கடன் தொகையின் பெறுமதி (வட்டியுடன் 36 கணக்குகளின் மொத்த தொகை) | - ரூ: | 436,489.36 |
| அக்கணக்குகளில் செயலிழந்த தினத்தன்று மீதி (ஆரம்பத் தொகை) | - ரூ: | 176,160.73 |
| அறவிட முடியாக் கடனாக பதிவளிக்கும் போது மீதி (வட்டியுடன்) | - ரூ: | 2,090,040.80 |

III. மேற்படி செயற்பாட்டினைப் பின்பற்றி அந்த காலப் பகுதியினுள் மேலும் செயற்படாத 860 கணக்குகள் தொடர்பாகவும் 818 ஆவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தீர்மானம் பின்வருமாறு அமைந்தது. (அட்டவணை 6)

| | | |
|---|---|---|
| 860 கணக்குகளின் மொத்த கடன் பெறுமதி | - ரூ: | 6,598,200.00 |
| மீள அறவிட்டுக் கொண்ட கடனின் பெறுமதி (வட்டியுடன்) | - ரூ: | 5,763,308.17 |
| அறவிட முடியாது போன பெறுமதி (ஆரம்ப தொகை) | - ரூ: | 834,891.83 |
| அக்கணக்குகள் செயலிழந்த தினத்தன்று மீதி (வட்டியுடன்) | - ரூ: | 3,488,583.85 |
| 2014.07.30 தினத்தன்று வட்டியுடன் மீதி | - ரூ: | 47,030,670.81 |

IV. செயலிழந்த 153 கணக்குகளும் முறையான கணக்காய்வின் பின்னர் 820 ஆவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை கூட்டத்தின் போது மேற்படி முறைக்கேற்ப நடவடிக்கை எடுத்து பின்வருமாறு புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்டது. (அட்டவணை 6)

| | | |
|---|---|---|
| வழங்கிய கடன் தொகையின் மூலதனப் பெறுமதி | - ரூ: | 1,775,542.15 |
| அறவிட்டுக் கொண்டுள்ள தவணைகளின் பெறுமதி | - ரூ: | 2,029,262.55 |
| கடன் தொகையுடன் ஒப்பிடுகையில் பெற்ற வருமானம் | - ரூ: | 253,720.40 |
| செயலிழந்த தினத்தன்று மீதி | - ரூ: | 1,002,752.66 |
| 2014.12.31 தினத்தன்று வட்டியுடன் மீதி | - ரூ: | 5,273,333.33 |

இந்த தொகையும் அறவிட முடியாக் கடன் ஒதுக்கத்துடன் சீராக்கம் செய்து இறுதிக் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த விதம் பற்றி அட்டவணை 7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை - 06**

| செயற்படா கணக்குகள் தொடர்புபடுகின்ற காலப் பகுதி | கணக்குகளின் எண்ணிக்கை | கடன் தொகையின் மூலதனப் பெறுமதி ரூ. | மீள அறவிட்டுக் கொண்ட தொகை ரூ. | குறை/மிகை ரூ. | செயலிழந்த தினத்தன்று மீதி ரூ. | திரண்ட வட்டியுடன் மீதி ரூ. |
|---|---|---|---|---|---|---|
| **1984-2005** | 504 | 3,877,200 | 6,414,770 | 2,537,570 | 1,546,085 | 16,226,259 |
| **1984-2008** | 36 | 209,500 | 436,489 | 226,989 | 176,161 | 2,090,041 |
| **1984-2008** | 860 | 6,598,200 | 5,763,308 | (834,891) | 3,488,584 | 47,030,671 |
| **1984-2005** | 153 | 1,775,542 | 2,029,263 | 253,720 | 1,002,752 | 5,273,333 |
| **மொத்தம்** | 1553 | 12,460,442 | 14,643,830 | 2,183,388 | 6,213,582 | 70,620,304 |

குறிப்பு : 2013.03.06 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பொது தொழில் முயற்சிகள் பற்றிய தெரிகுழுவின் அவதானிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்ட போது காணப்பட்ட செயற்படா கடன் தொகையின் பெறுமதி 59.2 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன், குறித்த சிபாரிசுகளை அமுல்படுத்தும் சந்தர்ப்பமாகும் போது கடந்த காலத்தினுள் சேர்ந்த வட்டியுடன் அத்தொகையானது 70.6 மில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை - 07**

| கால எல்லை | கணக்குகளின் எண்ணிக்கை | செயற்படா கணக்குகளின் மீதி | | | கணக்குகளில் இருந்து அகற்றிய விதம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | செயலிழந்த தினத்தன்று மீதி ரூ. | திரண்ட வட்டி ரூ. | திரண்ட வட்டியுடன் மீதி ரூ. | அறவிட முடியாக் கடன் ஒதுக்கக் கணக்கு ரூ. | ஐயக் கடன் வட்டிக் கணக்கில் ரூ. | மொத்தம் ரூ. |
| **1984-2005** | 504 | 1,546,085 | 14,680,174 | 16,226,259 | 1,546,085 | 14,680,174 | 16,226,259 |
| **1984-2005** | 36 | 176,161 | 1,913,880 | 2,090,041 | 176,161 | 1,913,880 | 2,090,041 |
| **1984-2008** | 860 | 3,488,584 | 43,542,086 | 47,030,671 | 3,488,584 | 43,542,086 | 47,030,671 |
| **1984-2005** | 153 | 1,002,752 | 4,270,580 | 5,273,332 | 1,002,752 | 4,270,580 | 5,273,333 |
| **மொத்தம்** | 1553 | 6,213,582 | 64,406,722 | 70,620,304 | 6,213,582 | 64,406,722 | 70,620,304 |

அவ்வாறே, தொடர்ந்தும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் செயற்படா கடனாக 2014.12.31 ஆம் திகதியன்று காணப்படுகின்ற 1,565,623.98 மில்லியன் ரூபா தொகை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதன் பின்னர் செயற்படா கடன் உருவாவதை தடுப்பதற்காக நிறுவனத்தினுள் முறையான வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

## 1.6 நிறுவனத்திற்கு மேலதிகமாக நிதி அறவிடப்படல்

கடன் கணக்குகளைத் தீர்த்து முடிவுறுத்திய பின்னரும் பல்வேறு காரணங்களின் மீது சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் நிதியினை அறவிட்டு அனுப்புள்ளமை காரணமாக பல வருட காலமாக ஒன்று சேர்ந்துள்ள தொகையானது இந்நிறுவனத்தினுள் **"மிகை அறவீடுகள்"** எனும் பெயரில் 12.7 மில்லியன் ரூபா பெறுமதியான தொகை 2012.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறான இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. அந்த மிகை அறவீடுகளும் பொது தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் ஆலோசனையின் பிரகாரம், கடனாளிகளுக்கு அறிவித்ததன் பின்னரும் உரிமையாளர்கள் முன்வராத தொகையினை நிதியத்தின் வருமானக் கணக்கிற்கு உரிமை மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2014.12.31 ஆம் திகதியாகும் போது அதனை ரூ.784,107.33 தொகை வரையில் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

## 1.7 அலுவலகக் கட்டடத் தொகுதி – லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

### 1.7.1 வாடகை வருமானம்

லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் அலுவலகத்தை நடாத்திச் செல்லுகின்ற கட்டதத்தில் 5500 சதுர அடிப் பிரதேசத்தை நிதியத்தின் தேவைக்காக பயன்படுத்திவிட்டு மீதமுள்ள பகுதியை பின்வரும் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கி 2014 ஆம் ஆண்டிலே வாடகை வருமானமாக 14.3 மில்லியன் ரூபா உழைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 08 – 2014 ஆண்டின் கட்டட வாடகை வருமானம்**

| தொடர் இல. | நிறுவனம் | வாடகைக்குப் பெற்றுள்ள மாடி | சதுர அடி | வருமானம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் | 3 ஆம் மாடி | 5,500 | - |
| 02 | லேக் ஹவுஸ் புத்தகசாலை | கீழ் மாடி மற்றும் தரை மாடி | 10,790 | 5,074,500 |
| 03 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | 1 ஆம் மாடி | 2,415 | 1,833,600 |
| 04 | கஹுட்டகஹ கிரெபைட் லங்கா லிமிடட் | 1 ஆம் மாடி | 2,750 | 2,213,600 |
| 05 | இலங்கை மின்சார சபை | 2 ஆம் மாடி | 4,700 | 3,860,472 |
| 06 | அரச தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு | 2 ஆம் மாடி | 840 | 960,000 |
| 07 | ஏ.ஜே.எஸ். எசோசியேடட் நிறுவனம் | இலக்கம் : 100/20 | 380 | 408,000 |
| | மொத்தம் | | **27,375** | **14,350,172** |

### 1.7.2 நிதியத்தின் ஸ்திரத் தன்மை

நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதி ஸ்திரத் தன்மையினைப் பேணி வருவது தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனமானது திறைசேரியில் தங்கிவாழும் நிறுவனம் ஒன்றல்லாத இல்லாத படியினால் ஊழியர்களின் சம்பளம் உட்பட அனைத்துச் செலவினங்களும் இதன் வட்டி வருமானத்தின் மூலம் மேற்கொள்ளப்படகின்றது. வட்டி வருமானத்தினுள் தொழிற்பாட்டு ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படுவதுடன் அறவிட முடியாக் கடன், ஏனைய நிருவாகச் செலவுகள் மற்றும் கடனை மீள அறவிட்டுக் கொள்வதற்காக ஏற்படுகின்ற ஏனைய செலவுகள் அனைத்தினையும் இந்த வருமானத்தினுள் உட்படுத்திக் கொண்டதன் பின்னர் நிதியத்தின் மேலதிக நிதியானது மக்கள் வங்கியில் பின்வருமாறு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 09 – முதலீடுகள்**

| முதலீட்டு வகை | வங்கி | 2014/12/31 தினத்தன்று (ரூ.) | 2013/12/31 தினத்தன்று (ரூ.) |
|---|---|---|---|
| நிலையான வைப்பு | மக்கள் வங்கி | 85,429,103 | 71,842,646 |
| திறைசேரி உண்டியல்கள் | மக்கள் வங்கி | 13,317,348 | 12,416,639 |
| குறுங்கால முதலீடுகள் (REPO) | மக்கள் வங்கி | 38,507,836 | 15,360,453 |
| மொத்தம் | | **137,254,287** | **99,619,738** |

### 1.7.3 தொழிற்பாட்டு வருமானம்

2014 ஆம் ஆண்டினுள் மொத்த தொழிற்பாட்டு வருமானம் 80.37 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன், தேறிய தொழிற்பாட்டு மிகையானது 30.04 மில்லியன் ரூபாவாகும். 2013 ஆம் ஆண்டிலே தொழிற்பாட்டு வருமானமாகக் காணப்பட்ட 76.33 மில்லியன் ரூபா தொகையுடன் ஒப்பிடுகையில் 4 மில்லியன் ரூபா அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

**வரைபு 02 – தொழிற்பாட்டு மிகை 2011 – 2014**




## 1.8 கடன் வழங்குவதில் வசதியளிப்பாளராக (Facilitator) செயற்பட்ட நிறுவனங்கள்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களுக்கு அந்நிறுவனத்தின் நிதியினைப் பயன்படுத்தி கடன் வழங்கும் வசதியளிப்பவராக 2014 ஆம் ஆண்டு வரையில் செயற்பட்டதுடன், அக்கடன் செயற்பாட்டின் மூலம் விசேட முன்னேற்றமொன்று காட்டாதபடியால் 2014 யூன் மாதம் 30 ஆம் திகதியன்று வைப்புத் தொகையின் மீதிக்கு ரூ.82,626.59 பெறுமதியான காசோலைகள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நிருவாகத்திடம் பெற்றுக் கொடுத்து அக்கடன் செயற்பாடானது நிறுத்தப்பட்டது.

**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் வைப்புத் தொகை மற்றும் கடன் கணக்குகளை தீர்த்தல் 2014/06/30 தினத்தன்று**

| | |
|---|---|
| சேமிப்புக் கணக்கின் மீதி | ரூ. 1,665,466.36 |
| கழி – கடன் கணக்கு மீதி | ரூ. (1,582,839.77) |
| தெங்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற்றுக் கொடுத்த காசோலையின் பெறுமதி | ரூ. **82,626.59** |

**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு 2014 ஆம் ஆண்டில் பின்வருமாறு கடன் வழங்கப்பட்டுள்ளது.**

| நிறுவனம் | கடன் தொகை | வழங்கிய கடன் பெறுமதி (ரூ.) |
|---|---|---|
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 07 | 70,000 |

## 1.9 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டம் - 2014

அரச கொள்கைகளின் பிரகாரம் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு இந்நிதியமும் பங்களிப்புச் செலுத்தியது. அதன்படி தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டம் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் வருடாந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னிட்டு இந்நிதியத்தின் நன்மைகளை அனைத்து அரச ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் குருநாகல், கேகாலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 148 அரச ஊழியர்களுக்கு 5.88 மில்லியன் ரூபா பெறுமதியான கடன் தொகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**அட்டவணை 10 – தேசத்திற்கு மகுடம் நடாத்திய மாவட்டங்களின் கடன் பெறுநர்கள் தொகை**

| மாவட்டம் | ஊழியர் தொகை | கடன் தொகையின் பெறுமதி (ரூ. 000) |
|---|---|---|
| குருநாகல் | 51 | 2,000 |
| கேகாலை | 94 | 3,760 |
| புத்தளம் | 03 | 120 |
| மொத்தம் | **148** | **5.880** |

# 2. நிதியத்தின் பின்னணி

இந்த நாட்டில் வசித்த ஸ்கொட்லண்ட் நாட்டைச் சேர்ந்த ஜீன் லோஹோர் சீமாட்டியினால் கடன் நிதியினைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஆரம்ப மூலதனமாக 300 பவுண் நிதி நன்கொடையாக வழங்கப்பட்டது. அக்காலத்தின் தர்ம ஆணையாளராக இருந்த அருட்தந்தை நதானியல் நிதியத்தினை ஆரம்பிக்கும் பணிகளில் முன்னின்று செயற்பட்டதுடன், 1927 மார்ச் 26ஆம் திகதி லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றிலிருந்து இந்த நிதியம் பயனாளிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் அவற்றினை மீள அறவிடுதல் நடவடிக்கைகள் மூலம் சுழற்சி நிதியமாக செயற்படுகின்றது. அரச சேவையைப் போன்று வியாபார நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் தங்களது குறுகிய கால நிதித் தேவையினை பூர்த்தி செய்வதற்கு நிலவும் வங்கி முறையானது துணைபுரியாததனால் அதிக வட்டியில் கடன் வழங்கும் தனிநபர்களிடம் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு பழகியுள்ளனர். இதன் காரணமாக அரச சேவையாளர்களும் தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களும் கடன் சுமையினால் கஸ்டப்படுகின்றனர். இவ்வாறான சூழலில் லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் நிறுவப்பட்டதன் பின்னர் இந்த ஊழியர்களுக்கு கடன் பெற்றுக்கொள்வதானது மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது.

1957ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நியதிச்சட்டமாக்கப்பட்டு நிதியத்திற்கு அரசினால் மற்றம் வேறு நன்கொடைகள் மூலம் கிடைக்கப்பெற்ற உதவிகள் மூலம் இந்த நிறுவனத்திற்குரிய இரண்டு மாடி கட்டடம் கட்டப்பட்டது.

### 2.1 நம்பிக்கை பொறுப்புச் சபை

பொறுப்புச் சபையானது அரச மற்றும் தனியார் பிரிவுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். இந்த நிறுவனத்தின் காப்பாளர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராவதுடன், அவரால் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களில் ஒருவர் நிதியத்தின் நிர்வாகத்திற்கு அவசியமான பொறுப்புச் சபையினால் வழங்கப்படும் கட்டளைகளை செயற்படுத்துவதற்கு நிர்வாகப் பொறுப்பாளர் சட்டத்தின் 10 மற்றும் 11ஆம் பந்திகளில் குறித்துரைத்துள்ளவாறு, நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு நியமிக்கப்பட்டவர்களில் இருந்து நியமிக்கப்படுவார். அந்தச் சட்டத்தின் 3.2ஆம் பந்திக்கு அமைவாக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தலைவர் பதவி திறைசேரி பிரதிநிதியால் வகிக்கப்படும்.

### 2.2 அட்டவணை 11 – 2014 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பதவியணி

| தொடர் இல. | அனுமதிக்கப்பட்ட பதவி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கணக்காளர் | 01 | 01 |
| 2 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 |
| 3 | கணக்கு அலுவலர் | 01 | 01 |
| 4 | உள்ளக கணக்கீட்டு அலுவலர் | 01 | 01 |
| 5 | முகாமைத்துவ உதவியாளர் | 35 | 32 |
| 6 | சாரதி | 02 | 02 |
| 7 | அலுவலக பணியாளர் | 05 | 05 |
| 8 | கட்டட பராமரிப்பு உதவியாளர் | 01 | 01 |
| | மொத்தம் | **47** | **44** |

## 2.3 நிருவாகக் கட்டமைப்பு



# 3. சாதாரண நிருவாகமும் மனிதவள அபிவிருத்தியும்

## 3.1 புதிய ஆட்சேர்ப்புக்கள்/ சேவையில் இருந்து அகற்றுதல்

2014 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த 4 அலுவலர்கள் அவர்களது தனிப்பட்ட தேவையின் நிமித்தம் சேவையை விட்டும் விலகியதுடன் அதன் மூலம் வெற்றிடமான பதவிகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் �்ஜ்ஜ் இற்கு புதிய 03 அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

## 3.2 பதவியணிக்கான கடன்

- உத்தியோகத்தர்களின் 10 மாதச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூ.250,000/- என்ற வரையறையின் கீழ் அலுவலக பணியாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
